# அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்ட நலவாழ்வுச் சங்கம்,
மாவட்ட தர நிர்ணய ஆலோசகர் பணியிடம் (ஒப்பந்த அடிப்படை)
புதுக்கோட்டை மாவட்டம்.

புதுக்கோட்டை மாவட்ட நலவாழ்வு சங்கத்தின் மூலமாக மாவட்ட தர நிர்ணய ஆலோசகர் ஒரு பணியிடம் காலியாக உள்ளதால் அப்பணியிடத்தை ஒப்பந்தத்தின் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திட தகுதியானவர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் செயற்செயலர், மாவட்ட நலவாழ்வு சங்கம், புதுக்கோட்டை மாவட்டம் / துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம், புதுக்கோட்டை அலுவலகத்தில் விண்ணப்பங்களை **25.12.2021** முதல் **03.01.2022** மாலை 5.00 மணி வரை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட பணியிடத்திற்கான விண்ணப்பங்களை செயற்செயலர், மாவட்ட நலவாழ்வு சங்கம், புதுக்கோட்டை மாவட்டம் / துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம், புதுக்கோட்டை அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் **03.01.2022** அன்று மாலை 5.00 மணி வரை. பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இப்பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், வரும் காலங்களில் பணிவரன்முறை செய்யப்படவோ அல்லது நிரந்தரம் செய்யப்படவோ மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட தர நிர்ணய அலுவலருக்கு மாத ஊதியம் ரூ.40,000/- வழங்கப்படும்.